2023 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் புதிய தொழிற்கொள்கைகளை உருவாக்குவது புதிய தொழில் முதலீடுகளை வரவேற்பதற்காகத்தானேயொழிய, தொழிற்கொள்கைகளை நாம் உருவாக்குகிறபோது, நாமே ஒவ்வொரு தொழிற்கொள்கைக்கும் ஒரு* factory*-ஐ கொண்டுவர முடியாது. உதாரணத்திற்கு* EV policy *கொண்டு வர வேண்டுமென்றால் உடனடியாக அரசாங்கம்* EV*-க்கு செல்ல முடியாது.* Ethanol *என்பது நீங்கள் சொல்வதைப்போன்று மிக முக்கியமான ஒரு முன்னெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைச் செய்திருக்கிறார்கள். எத்தனால் கொள்கையை தமிழ்நாட்டில் உருவாக்கியிருப்பது ஒரு மிகச் சிறந்த கொள்கை என்று அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்வதுபோன்று, சர்க்கரை ஆலைக்கு அது மாபெரும் வரப்பிரசாதமாக இருக்கிறது.* Complete turn around *செய்யக்கூடிய அளவிற்கு இன்றைக்கு* ethanol policy *வந்திருக்கிறது.*

முற்பகல் 10–40

Feedstock*-ஐ பொறுத்தமட்டில் நீங்கள் சொல்வது மாதிரி நெல்லிலிருந்து வரக்கூடிய அரிசி மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அது நெல் உற்பத்தியாளர்களுக்கு மிக முக்கியமான வாய்ப்பாக அமையும். மரவள்ளிக்கிழங்கைப்போல மற்ற* feedstock *குறித்தும் நீங்கள் இங்கே கருத்துகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். அதுகுறித்து தொழில்நுட்ப வகையில் யார் வந்தாலும் கொள்கை அடிப்படையில் உதவுவதற்கு அரசு ஆர்வமாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

தடையின்மைச் சான்று

***54982—திரு. க. கணபதி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 மார்ச் 24

மதுரவாயல் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி பெற தடையின்மைச் சான்று வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரவாயல் கிராமத்தில் வீட்டு வசதி வாரியத்தால் எடுக்கப்பட்ட நிலங்களுக்கு முழுமையான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அந்த நிலங்களை விடுவிக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி பெற தடையின்மைச் சான்று வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தால் எடுக்கப்பட்டு, முழுமையான தொகைகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், அந்த இடத்தை நாம் தனியாருக்குக் கொடுப்பது என்பது சிரமம். அவர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகத்தான் கருதப்படுவார்கள். அப்படி வீட்டு வசதி வாரியம் எடுக்காமல், அவர்களுக்கு பணம் செலுத்தாமல் இருந்தால், அந்த இடர்பாடுகள் இடையிலே இருந்தால், அதை நீக்கிக் கொடுப்பதற்கு வீட்டு வசதி வாரியம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அங்கே 167.70 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது. அதிலே 133.44 ஏக்கர் நிலத்திற்கு பணம் செலுத்தப்பட்டு, வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே* NOC *கொடுப்பது என்பது சிரமம். ஆனால், மீதமிருக்கின்ற 34.26 ஏக்கர் 4 (i)* notice

2023 மார்ச் 24]

கொடுத்ததோடு இருக்கிறது. எனவே, அதற்கு NOC கோரினால், நிச்சயமாக அதை நாம் பரிசீலிக்கலாம். மற்றவற்றிற்குக் கொடுப்பது என்பது சிரமம். நீதிமன்ற வழக்கு ஏதாவது இருந்தால், அதனை அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசால் வீட்டு வசதி வாரியத் திட்டத்தின் மூலமாக அண்ணா நகர், கே.கே. நகர், அசோக் நகர் மற்றும் முகப்பேர் ஆகிய இடங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, முறையாக தமிழ்நாடு வீட்டுவசதித் துறையின் layout–கள் LIG, MIG, HIG என போடப்பட்டு, குடியிருப்புகளெல்லாம் கட்டப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, எனது மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட வளசரவாக்கம், இராமாபுரம், நெற்குன்றம், போரூர் மற்றுமுள்ள அனைத்து இடங்களிலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாத நிலையில், அனைத்து நகரத் தெருக்களிலும் 95 சதவிகித மனைகளில் வீடுகள் முறையாக CMDA, Greater Chennai Corporation மற்றும் அனைத்து local body மூலமாக, 10 சதவிகிதம் OSR கட்டி, அனைத்து மனைகளுக்கும் கட்டட அனுமதி பெற்று, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 95 சதவிகிதம் கட்டி முடித்தாகிவிட்டது. அனைத்து வகையான அடிப்படை வசதிகளும் அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மிஞ்சியுள்ள 5 சதவிகித மனைகள் கட்டட அனுமதிக்கு செல்லும்போது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அதிகாரிகள், NOC கேட்கிறார்கள். TNHB ஆல் சொந்தமாக்கப்பட்டுள்ள பெரிய பரப்புள்ள நிலங்கள், ஏற்கெனவே, பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளன. பட்டா எண்கள், மதுரவாயல் 834, வளசரவாக்கம் 1,462, இராமாபுரம் 785 மற்றும் நெற்குன்றம் 258 ஆகும். இது website–ல் தெளிவாக இருக்கிறது. இதன்படி நிலங்களை விடுத்து, மீதமுள்ள உரிமையாளர்கள் பெயரில் பட்டா உள்ள நிலங்களுக்கு NOC கேட்காமல், அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய துரிதமான ஆலோசனைகளைப் பெற்று, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

அடுத்து, ஒரே ஒரு கோரிக்கை. வீட்டு வசதித் துறையில் award pass செய்து 30 வருடங்களுக்கு மேலாகியும், தமிழக வீட்டு வசதி வாரியத்தினால் கையகப்படுத்தப்படாத நிலங்கள் மற்றும் பட்டாக்களைத் தங்களின் பெயரில் கொண்டுள்ள உரிமையாளர்களின் நிலங்களை, தமிழக வீட்டு வசதித் துறை, land acquisition list-லிருந்து denotification செய்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தடையில்லாச் சான்று வழங்கி, மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. க. கணபதி: ஒரே ஒரு நிமிடம். இன்றைக்கு சென்னை Corporation-ல் நிறைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆனால், எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் இடங்கள் நிறைய இருக்கின்றன. வாடகை எதுவும் இல்லாமல், வீட்டு வசதி வாரிய இடங்களை மக்கள் பணி செய்வதற்கோ, கட்டடங்கள் கட்டுவதற்கோ, இதர பல்வேறு பணிகள் செய்வதற்கோ, இலவசமாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இந்தத் திட்டத்தின்கீழ், 1986–1987-ல் கையகப்படுத்தப்பட்டது. அதிலேயிருந்து எடுக்கப்பட்ட நிலங்களிலே, மொத்தமாக 50 ஏக்கர் நிலம் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 87 ஏக்கருக்கு மேலே ஆக்கிரமிப்பிலே இருக்கின்றன. இதிலே எந்த முடிவையும் வாரியம் சரியாக எடுக்காமல் இருந்தது என்பது உண்மைதான். இந்த இடம் மட்டுமல்ல, பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பழைய உரிமையாளர்களுக்கும், வீட்டு வசதி வாரியத்திற்கும் இடையிலே பிரச்சினையாக இருக்கின்றன. பலபேர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஒன்றாக இணைத்து,

2023 மார்ச் 24]

ஒரே முடிவாக எடுக்கலாம் என்று நாங்கள் ஓர் ஏற்பாட்டை செய்திருக்கிறோம். துறை சார்பாக ஒவ்வொரு கோப்பினையும் ஆய்வு செய்து, அதை விடுவிப்பது நியாயமா, இல்லையா? நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அதில், ஒரேயொரு சிக்கல் இருக்கிறது. அதாவது, நாம் எடுக்கிற நடவடிக்கைமீது யாரும் தவறான குற்றச்சாட்டை சொல்லிவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு சரியான committee *அமைத்து, அந்த* committee *மூலமாக, அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வகையில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. இது, நீண்டகாலமாக நிலுவையில் இருக்கிற பிரச்சினை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதற்கொரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று எங்களுக்கு ஆய்வுக்கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

பித்தளை பாத்திர தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***54655—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை பகுதியில் பித்தளை பாத்திர தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*